
**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர் 4 இதழ் 1, 2023**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை**
**பதிப்பகம் பன்னாட்டுத்தரப்புத்தக எண்: 978819 4845959**
**இணையதளம்: https://restpublisher.com/book-series/ctll/**
**DOI: https://doi.org/10.46632/ctll/4/1/4**



# சிறார் இலக்கியங்களில் மனிதநேயம்

**சி. உமா மகேஸ்வரி**
தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரி, விழுப்புரம் , தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: umamahes.selva@gmail.com

## 1. முன்னுரை

“**யாதும் ஊரே யாவரும் கேளிர்”** என்று உலகிற்கே மனித நேயத்தை எடுத்துக்காட்டி வாழ்ந்தவர்கள். தமிழர்கள் சுயநலம் இல்லா பிறர் நலம் பேண வேண்டும் எனும் உன்னத பண்பை உள்ளடக்கி முதல் அடியை எடுத்து வைத்ததில் தமிழருக்கு முக்கிய பங்கு உண்டு என்றால் அது மிகையாகாது. 3000 ஆண்டுகளுக்கு முன்பே திருமூலரும் தன் நூலான திருமந்திரத்தில் மனித நேயம் தொடர்பானக் கருத்தியலைப் பதிவு செய்திருக்கின்றார். சங்கம் மருவிய காலத்தில் எழுந்த அற நூல்களுள் முதன்மையான நூலான திருக்குறளும் இதனையே முன்மொழிவதாக இருக்கின்றது. வரலாற்றைப் பின்னோக்கினால் புறாவுக்கு தன் உடலை தானம் செய்த சிபிச் சக்கரவர்த்தியும் முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியும் மயிலுக்கு போர்வை அளித்த பேகனும் பசுவிற்காக தன் மகனைகொல்ல முன்வந்தமனுநீதி சோழனும் மனிதநேய பண்பிற்கு எடுத்துக்காட்டாக திகழ்ந்தவர்கள் எனலாம் இத்தகைய மனிதநேய பண்புஅக்காலம் தொட்டு தமிழன் குருதியோடு கலந்த ஒன்றாகவே இருக்கின்றது. அதில் பல்வேறு கால இலக்கியங்கள் பல செய்திகளைப் பறைச்சாற்றி நிற்க, சிறார்களுக்கு நீதியை மட்டுமே கூறக்கூடிய நூல்களானசிறார் இலக்கியங்களும் மனிதநேயப் பண்பை வளர்க்கவே முழுமையும் பயன்படுத்தப்பட்டதாக நாம் கருதலாம் அவ்வாறு குழந்தை இலக்கியத்தில் கண்ணி கோயில் ராஜா அவர்களின் “விளையாட்டை நிறுத்திய தும்பிகள்”என்ற நூலில் மனிதநேயம் எவ்வாறு மிளிர்கின்றது என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 2. மனிதநேயம்

மனிதநேயம் பற்றி பொதுவாக சொல்வோமானால் தன்னுயிர் போல மண்ணுயிரையும் பாவித்தல் என்கிற விஷயமே மனித நேயத்தின் அடிப்படை நிலையாகும். உலகில் மனிதர்கள் ஒவ்வொருவரும் துன்பத்தால் துவண்டு துவள்வது இயற்கை. இயற்கையோடு இணைந்து வாழும் மனிதர்கள் தன்னைப்போல் அனைத்து உயிரினங்கள் மரங்கள், விலங்குகள் என பாகுபாடு இல்லாமல் அனைத்து இயற்கை உயிரினங்களின் மேலும் நேயத்தை ஏற்படுத்தி தம் வாழ்வை சிறப்புடையதாக ஆக்குவதே மனித நேயமிக்க பண்பாடு எனலாம். மனிதநேயத்திற்கு இணையான பொருளோ செல்வமோ இந்த உலகத்தில் இல்லை எனலாம்.

## 3. கன்னி கோயில் ராஜாயின் ராஜாவின் படைப்புகள்

சென்னை வாசியும் வாழும் எழுத்தாளருமான கன்னிக்கோயில் ராஜா அவர்கள் சிறார் இலக்கியத்தில் தன்னுடைய பெருமைமிக்க பணியை சிறப்பாக செய்து வரும் படைப்பாளர், பதிப்பாளர் ஆவார். இவர் 36 சிறார்களுக்கான படைப்புகளை படைத்து குழந்தை இலக்கிய வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்ற கூடிய இன் நூற்றாண்டு கவிஞர் இவர் குழந்தைகள் படிப்பதற்காக குழந்தை மொழியான குஞ்சு மொழியிலேயே இலக்கியங்களை உருவாக்கி வருகிறார். குழந்தை என்ற சொல் முற்றிலும் பொருந்தாவிட்டாலும் அதிகமான பொருத்தத்தைப் பெற்றிருப்பதால் குழந்தை என்ற சொல்லையே பயன்படுத்தலாம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள் குழந்தை இலக்கியத்தை பற்றிய நூலான '**விளையாட்டை நிறுத்திய தும்பிகள்**' எனும் கன்னிக்கோயில் ராஜாவின் கதை தொகுப்பில் இடம்பெறும் மனித நேயம் எவ்வாறு பரிணமிக்க போகிறது என்பதை இ.ங்கே காணலாம்.

## 4. மனித நேயம் காட்டும் சிறார் இலக்கியங்கள்

சிறார் இலக்கியங்கள் 12 வயதுக்கு உட்பட்டோருக்காக எழுதப்படும் இலக்கியங்கள் ஆகும். சிறுவர்கள் ஒவ்வொரு நிலையிலும் அவர்கள் வளர்ந்து வரும் பல்வேறுபட்ட மனிதர்களையும் சமூகத்தையும் பார்த்தபடியே வளர்கிறார்கள், அவர்களுக்கு சிறு வயது முதலே நீதியை மட்டுமல்லாமல் உயிர்கள் இடத்திலும் அன்பு நேயத்தை காட்டக்கூடிய மனிதர்களாக வளரச் செய்வது நம் கடமை. அந்த மனிதநேயத்தை கன்னி கோயில் ராஜா அவர்களின் சிறுவர் கதையான " விளையாட்டை நிறுத்திய தும்பிகள்" எனும் கதை மூலம் நன்கு உணர முடிகிறது.

## 5. ஐந்தறிவு உயிரினங்களின் மனித நேயம்

விளையாட்டை நிறுத்திய தும்பிகள் எனும் சிறுவர் கதையில் குழந்தைகள் இணைந்து மட்டைப்பந்து விளையாட செல்கின்றனர். அந்த மட்டைப்பந்து விளையாடும் மைதானத்தில் பல தும்பிகள் பறந்து கொண்டிருக்கின்றன. அந்த தும்பிகளை விரட்டிவிட்டு மட்டைப்பந்து விளையாடலாம். இருப்பினும் தும்பிகளால் ஏற்படும் நன்மைகளையும் சிறுவர்கள் உணரும் பொருட்டு இன்றைய வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சி மூலமாகவே அதனை சிறுவர்களுக்கு உணர்த்தி அதன் வாயிலாக மனித நேயப்பண்பை சிறுவயது முதலில் வளர்க்கத் தூண்டுகிறார் ஆசிரியர்.

"**கரீம்போனில் இணையத்தில் திறந்து தும்பி 'தமிழ் விக்கிபீடியா' என போட்டான் வரி வரியாக செய்திகள் வந்தன அதைஉரக்கப் படித்தான் கரீம் அனைவரும் தும்பியின் செயல்பாடுகளைக் கேட்டார்கள் நம்ம மகிழ்ச்சி அடைய துன்பங்கள்தான் முக்கியம் வாங்கடா வீட்டுக்கு போகலாம் என்றான் மதி தும்பிகளைக் காப்பாற்றியமகிழ்ச்சியுடன் மிதிவண்டியை எடுத்தான் அருண்"** இவ்வுரையாடலில் இருந்து சிறு உயிரினமாக இருந்தாலும் அதன் இடமும் மனித நேயத்தை காட்ட வேண்டும் என்பதை காட்டுவதாக அமைகின்றது ஆசிரியரின் கதைப்போக்கு.

**"மரங்களுக்கு பசிக்குமா?"** என்ற கதையில் " நீ ஆசையா வளர்கிற மீன்களும் மாடியில் இருக்கின்ற பூச்செடிகளும் பசியோடு இருக்கிறது" என்னும் தொடரின் மூலம்நேயம் மீன்களுக்கும் செடிகளுக்கும் உரியதாக உள்ளது என்பது ஏஞ்சலின் அம்மா கூறுவதாக அமைகிறது. மேலும் விலங்குகளின் மிகவும் அருவருக்கத் தக்க வகையில் இருக்கும் **"பன்றி குட்டிக்கு உதவிய வனதேவதை**" கதையில் பன்றி குட்டி தன்னோடு யாரும் விளையாட வரவில்லை என்று மிகவும் வருத்தப்படுவதாக அமைத்த ஆசிரியர் அதற்கு வன தேவதையே ஒரு தீர்வையும் காட்டுகின்றார் பன்றி குட்டி நோஞ்சானாக

இருப்பதும் அதனால் குட்டியை யாரும் விளையாட்டுக்கு சேர்த்துக் கொள்ளவில்லை என கூறுவதாக அமைவதும் அந்நிலையில் இருந்து வெளிவர வன தேவதை சிறந்த அறிவுரை கூற அதன் படியே பன்றியும் சமவெளிகளுக்கு சென்று பழங்களைச் சேகரித்து அதனை எல்லோருக்கும் கொடுத்து அதன் விதைகளை மரம் ஆகும் முயற்சி செய்து முன்மாதிரியாக இருக்க தலைப்பட்டது இதிலிருந்து வன தேவதை விலங்குகளிடம் மனிதநேயத்தை காட்டுகிறது என்பதை அறிய முடிகிறது.

**"மரங்களோ, செடிகளோ, விலங்குகளோ, பறவைகளோ எதுவுமே யாரையும் எதிர்பார்க்காமல் தேவையானதைத் தேடிக்கொள்ளும் ஆற்றல் மிக்கது வெயில்,வெயில், மழை, காற்று இவை யாவுமே எல்லாவற்றுக்கும் போதுமானசக்தியைக் கொடுக்கும்"** எனும் வரிகளைக் கொண்டு அறிவியல் ரீதியாகவும் அதை நாம் காணலாம்.

## 6. அருகி வரும் மனித நேயம்

இன்றைய காலகட்டத்தில் மனித நேயம் மனிதர்கள் கிடையே அருகிக் கொண்டே செல்கிறது. மதப் பிரச்சனை, மொழிப்பிரச்சனை, நிறம்,சாதி, பேதம் என பல பேதமைகளால் அதிகார போட்டிகளினால் இவ்வுலகம் பல பிளவுகளாக பிளவு பட்டு கிடக்கின்றது. மனிதர்களுக்கு மனிதர் அன்பு பாராட்டுவதற்கு பதிலாக வெறுப்பையும் காழ்ப்புணர்ச்சியையும் உருவாக்குகின்றனர்அதிகாரப்போட்டி, பொருளாதாரப் போட்டி இவைப் போன்ற பல காரணங்களால் மனிதர்கள் நல் எண்ணங்கள் இல்லாது சண்டையிட்டுக் கொள்ளும் மிருகங்களாக மாறி வருகிறார்கள், ஆனால் சிறுவர்களுக்கு மனிதநேயத்தை உணர்த்த அவர்களுக்கு பிடித்தமான விலங்குகளையும் செடிகளையும் வைத்து இக்கதைகளில் மனித நேயம் உணர்த்தப்படுகின்றது.

## 7. முடிவுரை

மனித நேயம் உயர்வாக உள்ள மனிதர்கள் இதயத்தினால் சிந்தித்து புத்தியினால் அதை உணரவும் செய்வார்கள். அவ்வகையில் கன்னி கோயில் ராஜா அவர்களின் சிறார் கதைகளில் ஒன்றான **"விளையாட்டை நிறுத்திய தும்பிகள்"** எனும் கதையின் வாயிலாக மனித நேயம் என்பது மனிதர்களுக்கு மட்டும் அல்ல அது அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவான ஒன்றாக கருதப்பட வேண்டியது என்பதை வலியுறுத்துகின்றார். முன்னோர்கள் ஈ, எறும்பு, புழு, பூச்சி வண்டு,பறவை, விலங்கு என்று அனைத்து உயிர்களிடத்திலும் அன்பை பரிமாறி மனிதநேயத்தை வாழ்த்தினார்கள் மனித நேயத்துடன் வாழ்ந்தார்கள் அந்த பரிமாற்ற பண்பையே இக்கதைகளில் நம்மால் காண முடிகிறது. குறைந்து கொண்டே வரும் மனிதநேயம் இக் காலத்தில் அனைத்து உயிர்களிடத்திலும் மேம்பட்டு நிற்க, சிறாருக்கு அறிவுரை கூறும் சிறார் இலக்கியங்கள் பெரும் துணை புரிகின்றன. இவ்வாறு மனிதனை நேசிப்பதோடுஅனைத்து உயிரினங்களையும் நேசித்து அன்பின் வழியாக அமைதியையும் ஆனந்தத்தையும் மனித நேயத்தையும் விதைத்துக் கொண்டே இருப்போம் .உலகில் அன்பும் அமைதியும் மலர்ந்து கொண்டே இருக்கும் அதற்கு கன்னி கோயில் ராஜா அவர்களின் இக்கதை தொகுப்பு பெரும் உதவி புரியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

## அடிக்குறிப்பு


[1]. புறநானூறு - முல்லைப் பதிப்பகம், சென்னை.
[2]. முத்து சண்முகம் - தமிழில் குழந்தை பாடல்கள் முத்து பதிப்பகம், மதுரை.
[3]. இளங்குமரன் - நூற்றாண்டு கால தமிழ் இலக்கிய வளர்ச்சி, பாரி நிலையம், சென்னை.
[4]. கன்னி கோயில் ராஜா - விளையாட்டை நிறுத்திய தும்பிகள் மணிவாசகர் பதிப்பகம், சென்னை.